கொடைக்கானல் நகராட்சி

2021ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22ஆம் நாள் (22.02.2021) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

1) கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரம் வாகனம் TN 57 W 9357 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு 2021–2022ம் ஆண்டிற்கு பழுது பணிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | வைப்புத் தொகை ரூ. | லேபர் சார்ஜ் ரூ. | ஸ்பேர் பார்ட்ஸ் ரூ | மொத்தம் ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | ASR Body Works, No.17,18,19, Aadhisivan Nagar, Udhayam Nagar, Kovilpapakudi, Madurai - 625 018. | ரூ.5000/– | ரூ.47,028/– | ரூ.2,01,922/– | ரூ.2,48,950/– |
| 2 | Sadhguru Motors, Plot.No.56. Priyanka Nagar, Kovil Papakudi, Madurai-625 018. | ரூ.5000/– | ரூ.47,578/– | ரூ.2,04,922/– | ரூ.2,52,500/– |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ASR Body Works, No.17,18,19, Aadhisivan Nagar, Udhayam Nagar, Kovilpapakudi, Madurai - 625 018 நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்குவதற்கும் அதற்கான செலவுத் தொகை ரூ.2,48,950/–ஐ (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) துப்புரவுப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.21/2021/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **994, நாள். 22.02.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரம் வாகனம் TN 57 W 9634 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு 2021–2022ம் ஆண்டிற்கு பழுது பணிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | வைப்புத் தொகை ரூ. | லேபர் சார்ஜ் ரூ. | ஸ்பேர் பார்ட்ஸ் ரூ | மொத்தம் ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | ASR Body Works, No.17,18,19, Aadhisivan Nagar, Udhayam Nagar, Kovilpapakudi, Madurai - 625 018. | ரூ.5400/– | ரூ.46,463/– | ரூ.2,22,796/– | ரூ.2,69,259/– |
| 2 | Sadhguru Motors, Plot.No.56. Priyanka Nagar, Kovil Papakudi, Madurai-625 018. | ரூ.5400/– | ரூ.49,478/– | ரூ.2,22,796/– | ரூ.2,72,274/– |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ASR Body Works, Kovil Papakudi, Madurai நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்குவதற்கும் அதற்கான செலவுத் தொகை ரூ.269259/–ஐ

(ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்தி ஒன்பதாயிரத்து இருநூற்றி ஐம்பத்தி ஒன்பது மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) துப்புரவுப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.22/2021/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **995, நாள். 22.02.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பசுமை பள்ளத்தாக்கு பகுதியில் உள்ள கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 1.4.2021 முதல் 31.3.2024 முடிய உள்ள காலத்திற்கு அரசு ஆணை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.19.9.2008–ன் படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இவ்வினத்திற்கு கடந்த 3.2.2021 அன்று கோரப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு ஒருவரும் முன்வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை செலுத்த முன்வரவில்லை. 12.2.2021 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிக்கு முன்வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை செலுத்தப்பட்டது.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர் விபரம் | வைப்புத் தொகை விபரம் (ரூ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை விபரம் (ரூ) |
|---|---|---|---|
| 1. | திரு.ஜி.ரமேஷ்கண்ணா, த/பெ.கோவ்ந்தராஜ், பாம்பார்புரம், கொடைக்கானல். | முன் வைப்புத் தொகை ரூ.1,00,000/–<br>காப்புத் தொகை ரூ.25,000/– | ஒப்பந்தப்புள்ளி கோரவில்லை. |

இவ்வினத்திற்கு ஒருவர் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கோர வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை செலுத்தியும் ஒப்ந்தப்புள்ளி கோரவில்லை. எனவே, மீண்டும் 19.2.2021 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர் விபரம் | வைப்புத் தொகை விபரம் (ரூ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை விபரம் (ரூ) |
|---|---|---|---|
| 1. | திரு.ஜி.ரமேஷ்கண்ணா, த/பெ.கோவ்ந்தராஜ், பாம்பார்புரம், கொடைக்கானல். | முன் வைப்புத் தொகை ரூ.1,00,000/–<br>காப்புத் தொகை ரூ.25,000/– | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,10,000/– |
| 2. | திரு.வி.சங்கர், த/பெ.வேலுச்சாமி, எம.4.ஐ25, வீட்டுவசதி வாரிய குடியிருப்பு சங்கம், சின்னாளப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம். | முன் வைப்புத் தொகை ரூ.1,00,000/–<br>காப்புத் தொகை ரூ.25,000/– | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,67,000/– |

மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகைகளில் திரு.வி.சங்கர் என்பவர் அதிகபட்சமாக கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ,2,67,000/– ஆனது கடந்த ஆண்டு ஏலத் தொகையைக் காட்டிலும் ரூ.33295/– கூடுதலாகவும், கடந்த மூன்றாண்டு சராசரியைக் காட்டிலும் ரூ.58935/– கூடுதலாகவும் உள்ளது. மேற்கண்ட இனத்திற்கு வேறு எவரும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக் கோர வாய்ப்பில்லை என்பதாலும், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் விதிகள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாலும், நகராட்சிக்கு வருவாயினை ஈட்டிடம் வகையிலும், மேற்கண்ட திரு.வி.சங்கர் என்பவர் ஒப்பந்தப்புள்ளிக் கோரி அதிகபட்சத் தொகையான ரூ.2,67,,000/–ஐ மன்றத்தின் அனுமதி பெற்று உறுதி செய்து 1.4.2021 முதல் குத்தகைக்கு ஒப்படைக்க குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.2,67,000/–க்கு கேட்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மேற்கண்ட அதிகபட்ச ஏலக் கேள்வித் தொகை ரூ,2,67,000/– ஐ உறுதி செய்து அரசு ஆணை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.19.9.2008–ன் படி 1.4.2021 முதல் மூன்றாண்டு காலத்திற்கு மட்டும் குத்தகைக்கு ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.454/2018/அ3)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **996, நாள். 22.02.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகராட்சிக்குச் சொந்தமான கே.ஆர்.ராமசாமி கட்டிடத்தினை மியூசியமாக அனுபவிக்கும் உரிமத்திற்கு, அரசு ஆணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 3.7.2007–ன்படி, 29.1.2021 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒருவரும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர முன்வரவில்லை. எனவே, 10.2.2021 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர் விபரம் | வைப்புத் தொகை விபரம் (ரூ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை விபரம் (ரூ) |
|---|---|---|---|
| 1. | திரு.இ.கார்த்திக்,<br>த/பெ.டாக்டர்.கே.இளம்வழுதி,<br>8/143, ஆனந்தகிரி 4வது தெரு,<br>கொடைக்கானல். | முன் வைப்புத் தொகை ரூ.25,00,000/–<br>காப்புத் தொகை ரூ.10,00,000/– | மாத வாடகை<br>ரூ.1,45,000/– |
| 2. | திரு.ஜி.ரஞ்சித் குமார்,<br>த/பெ.கே.கணேசன்,<br>8/100, கே.சி.எஸ்.ரோடு,<br>அண்ணாசாலை,<br>கொடைக்கானல். | முன் வைப்புத தொகை ரூ.25,00,000/–<br>காப்புத் தொகை ரூ.10,00,000/– | மாத வாடகை<br>ரூ.1,25,000/– |

இவ்வினத்தறகு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பட்டுள்ளதால், மீண்டும் 19.2.2021 அன்று மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்கண்டவாறு 19.2.2021 அன்று கோரப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர் விபரம் | வைப்புத் தொகை விபரம் (ரூ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை விபரம் (ரூ) |
|---|---|---|---|
| 1. | திரு.இ.கார்த்திக்,<br>த/பெ.டாக்டர்.கே.இளம்வழுதி,<br>8/143, ஆனந்தகிரி 4வது தெரு,<br>கொடைக்கானல். | முன் வைப்புத் தொகை ரூ.25,00,000/–<br>காப்புத் தொகை ரூ.10,00,000/– | மாத வாடகை<br>ரூ.1,45,750/– |
| 2. | திரு.ஜி.ரஞ்சித் குமார்,<br>த/பெ.கே.கணேசன்,<br>8/100, கே.சி.எஸ்.ரோடு,<br>அண்ணாசாலை,<br>கொடைக்கானல். | முன் வைப்புத தொகை ரூ.25,00,000/–<br>காப்புத் தொகை ரூ.10,00,000/– | மாத வாடகை<br>ரூ.1,45,100/– |

மேற்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள இரண்டு நபர்களின் மாத வாடகைத் தொகைகள் ஏலக் குழுவால் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த குத்தகை இனமான கே.ஆர்.ராமசாமி கட்டிடமானது 25 ஆண்டுகளுக்கும் மேலான ஏலம் போகாமாலும் கட்டிடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முழுமையடையாமல் சிதிலமடைந்து காணப்படுவதாலும், மேற்கூரைப் பகுதி மழையின் போது ஒழுகி உட்புறத்தில் நீர் தேங்குவதால் துர்நாற்றம் வீசுவதோடு, பொது சுகாதாரத்திற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. கால்நடைகள் உள்ளே சென்று சுகாதாரக் கேடு ஏற்படுத்துவதோடு, சமூக விரோத செயல்களும் அதிகமாக நடைபெறுவதால், இக்கட்டிடத்தை உடனடியாக மேம்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால், இதனை அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.3.7.2007ல் கண்டுள்ள கொள்கை கோட்பாடுகளுக்கிணங்க மாத வாடகை அடிப்படையில் ஒப்படைத்து வருவாய் ஈட்டிடம் வகையில் கோரப்பட்ட பொது ஏலம் மற்றும் ஒப்ந்தப்புள்ளியில் மேற்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

மேற்கண்ட இரண்டு நபர்களில் திரு.இ.கார்த்திக் என்பவர் மாத வாடகைத் தொகை ரூ.1,45,750/—க்கு அதிகபட்சமாக ஒப்பந்தப்புள்ளியில் கோரியுள்ளார். இத் தொகையானது, பொதுப்பணித் துறை மற்றும் வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மாத வாடகைத் தொகையான ரூ.1,41,963/—ஐக் காட்டிலும் கூடுதலாக உள்ளது.

எனவே, சுற்றுலா நகரமான மலைகளின் இளவரசி என அழைக்கப்படும் கொடைக்கானல் பகுதியில் சுற்றுலாவினை மேம்படுத்தும் பொருட்டும், மேற்கண்ட கே.ஆர்.ராமசாமி சட்டிடத்தை பயனுடையதாகவும் செயல்படுத்தி அதன்மூலம் நகராட்சிக்கு வருமானம் வரக்கூடிய அளவிற்கும், திரு.இ.கார்த்திக் என்பவரால் அதிகபட்சமாக மாத வாடகை ரூ.1,45,750/—க்கு கேட்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகையை மன்றத்தின் அனுமதி பெற்று உறுதி செய்து குத்தகைக்கு ஒப்படைக்க குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.1,45,750/—க்கு கேட்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மேற்கண்ட அதிகபட்ச ஏலக் கேள்வித் தொகை ரூ,1,45,750/— ஐ உறுதி செய்து அரசு ஆணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.3.7.2007—ன்படி மாத வாடகை அடிப்படையில் குத்தகைக்கு ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1759/2017/அ3)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **997, நாள். 22.02.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) கொடைக்கானல் நகராட்சிக்குச் சொந்தமான புதிய அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள சிற்றுந்து நிறுத்தக் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு, 3.2.2021 மற்றும் 12.2.2021 கோரப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு ஒருவரும் முன்வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை செலுத்த முன்வரவில்லை. எனவே, மீண்டும் 19.2.2021 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர் விபரம் | வைப்புத் தொகை விபரம் (ரூ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை விபரம் (ரூ) |
|---|---|---|---|
| 1. | திரு.எஸ்.முகம்மது யாசிர் அரபாத்,<br>த/பெ.செய்யது பாரூக்,<br>அண்ணாசாலை, கொடைக்கானல். | முன் வைப்புத் தொகை ரூ.1,00,000/—<br>காப்புத் தொகை ரூ.25,000/— | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,65,000/— |
| 2. | திரு.எம்.முருகேஷ்,<br>38/41—ஏ, காந்திபுரம், கொடைக்கானல். | முன் வைப்புத் தொகை ரூ.1,00,000/—<br>காப்புத் தொகை ரூ.25,000/— | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,85,000/— |

மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகைகளில் திரு.எம்.முருகேஷ் என்பவர் அதிகபட்சமாக கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ,1,85,000/— ஆனது கடந்த ஆண்டு ஏலத் தொகையைக் காட்டிலும் ரூ.882/— கூடுதலாகவும், கடந்த மூன்றாண்டு சராசரியைக் காட்டிலும் ரூ.9511/— கூடுதலாகவும் உள்ளது.

மேற்கண்ட இனத்திற்கு வேறு எவரும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக் கோர வாய்ப்பில்லை என்பதாலும், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் விதிகள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாலும், நகராட்சிக்கு வருவாயினை ஈட்டிடம் வகையிலும், மேற்கண்ட திரு.எம்.முருகேஷ் என்பவர் ஒப்பந்தப்புள்ளிக் கோரி அதிகபட்சத் தொகையான ரூ.1,85,000/—ஐ மன்றத்தின் அனுமதி பெற்று உறுதி செய்து 1.4.2021 முதல் குத்தகைக்கு ஒப்படைக்க குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.2,67,000/—க்கு கேட்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மேற்கண்ட அதிகபட்ச ஏலக் கேள்வித் தொகை ரூ,1,85,000/— ஐ உறுதி செய்து அரசு ஆணை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.19.9.2008—ன் படி 1.4.2021 முதல் மூன்றாண்டு காலத்திற்கு மட்டும் குத்தகைக்கு ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.455/2018/அ3)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **998, நாள். 22.02.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கோக்கர்ஸ்வாக் பகுதியில் இயற்கை எழில் காட்சிகளை கண்டுகளிக்க நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 1.4.2021 முதல் 31.3.2024 முடிய உள்ள காலத்திற்கு அரசு ஆணை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.19.9.2008–ன் படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இவ்வினத்திற்கு கடந்த 3.2.2021 அன்று கோரப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு ஒருவரும் முன்வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை செலுத்த முன்வரவில்லை.12.2.2021 அன்று கோரப்பட்ட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு முன் வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட்டு ஏலத்தில் கலந்து கொண்டனர்.

| வ. எண். | ஏலத்தில் கலந்து கொண்டவர் விபரம் | வைப்புத் தொகை விபரம் (ரூ) | ஏலம் கோரிய தொகை விபரம் (ரூ) |
|---|---|---|---|
| 1. | திரு.ஆர்.அகிலன், த/பெ.எம்.ரவி, 41/10எப், எம்.ஆர்.டவர், புது அக்ரஉறாரம், திண்டுக்கல். | முன் வைப்புத் தொகை ரூ.25,00,000/–<br>காப்புத் தொகை ரூ.10,00,000/– | ஏலம் கோரவில்லை. |
| 2. | திரு.பி.சுரேஷ், த/பெ.பெருமாள் தேவர், 24/33, எல்.எஸ்.காலனி, திண்டுக்கல். | முன் வைப்புத தொகை ரூ.25,00,000/–<br>காப்புத் தொகை ரூ.10,00,000/– | ஏலம் கோரவில்லை. |

மேற்கண்ட இனத்திற்கு ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் ஏலம் கோர முன்வராததால் மீண்டும் இன்று 19.2.2021 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இருவரும் கலந்து கொண்டு கீழ்க்கண்டவாறு ஏலக் கேள்வி கேட்டுள்ளனர்.

| வ. எண். | ஏலத்தில் கலந்து கொண்டவர் விபரம் | வைப்புத் தொகை விபரம் (ரூ) | ஏலம் கோரிய தொகை விபரம் (ரூ) |
|---|---|---|---|
| 1. | திரு.ஆர்.அகிலன், த/பெ.எம்.ரவி, 41/10எப், எம்.ஆர்.டவர், புது அக்ரஉறாரம், திண்டுக்கல். | முன் வைப்புத் தொகை ரூ.25,00,000/–<br>காப்புத் தொகை ரூ.10,00,000/– | ரூ.96,85,000/– |
| 2. | திரு.பி.சுரேஷ், த/பெ.பெருமாள் தேவர், 24/33, எல்.எஸ்.காலனி, திண்டுக்கல். | முன் வைப்புத் தொகை ரூ.25,00,000/–<br>காப்புத் தொகை ரூ.10,00,000/– | ரூ.96,80,000/– |

மேற்கண்டவாறு இருவரும் கோரியுள்ள ஏலத் தொகையில் திரு.ஆர்.அகிலன் என்பவர் அதிகபட்சமாக ரூ,96,85,000/–க்கு ஏலம் கோரியுள்ளார். மேற்கண்ட தொகையானது கடந்த முறை ஏலம் கோரப்பட்ட மூன்றாண்டு ஏலத் தொகையின் சாராசரியைக் காட்டிலும், விட ரூ,1,00,349/– கூடுதலாக உள்ளது. மேற்கண்ட இனத்திற்கு வேறு எவரும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக் கோர வாய்ப்பில்லை என்பதாலும், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் விதிகள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாலும், நகராட்சிக்கு வருவாயினை ஈட்டிடம் வகையிலும், மேற்கண்ட திரு.ஆர்.அகிலன் என்பவர் ஏலம் கோரியுள்ள அதிகபட்சத் தொகையான ரூ.96,85,000/–ஐ மன்றத்தின் அனுமதி பெற்று உறுதி செய்து 1.4.2021 முதல் குத்தகைக்கு ஒப்படைக்க குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட அதிகபட்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.96,85,000/–க்கு கேட்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மேற்கண்ட அதிகபட்ச ஏலக் கேள்வித் தொகை ரூ,96,85,000/– ஐ உறுதி செய்து அரசு ஆணை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.19.9.2008–ன் படி 1.4.2021 முதல் மூன்றாண்டு காலத்திற்கு மட்டும் குத்தகைக்கு ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.788/2018/அ3)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **999, நாள். 22.02.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) அரசாணை நிலை எண்.79, நாள்.31.05.2015ன்படி, கொடைக்கானல் நகராட்சியில் மலிவு விலை சிற்றுண்டி திறக்க ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, கொடைக்கானல் நகராட்சியில் கே.ஆர்.ஆர்.கலையரங்க வளாகத்தில் அம்மா உணவகம் திறக்கப்பட்டு 25.05.2015 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அரசாணையில் அம்மா உணவகத்திற்கு தேவையான பொருட்களை கீழ்கண்ட விவரப்படி வாங்கிக் கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012–2013ஆம் ஆண்டிலிருந்து தமிழக அரசிற்கு மொத்த ஒதுக்கீடு (Bulk allotment) செய்யப்பட வேண்டிய அரிசி மத்திய அரசால் வழங்கப்பெறும் பட்சத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமிருந்து இத்திட்டத்திற்கான அரிசியை மானிய விலையில் பெறவும் அவ்வாறு இல்லையெனில் வெளிச்சந்தையில் அரிசி வாங்க ஆகும் முழு செலவினத்தையும் அந்தந்த நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் எனவும், இதர உணவுப் பொருட்களான உளுந்து, துவரம்பருப்பு, சமையல் எண்ணெய், மிளகாய், புளி, மஞ்சள்தூள், கடுகு, வெந்தயம் ஆகியவை அமுதம் / கூட்டுறவு சிறப்பங்காடியில் கொள்முதல் செய்யலாம் எனவும், காய்கறி வகைகளான அன்றாடம் வெளிச்சந்தையில் அன்றைய விலையில் கொள்முதல் செய்யலாம் எனவும், ஆவின் நிறுவனத்திலிருந்து தயிர் மொத்த விலை அடிப்படையில் கொள்முதல் செய்யலாம் எனவும், இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய பற்றாக்குறையை அந்தந்த நகராட்சியின் பொது நிதியிலிருந்து ஈடு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட அரசாணையின்படி இந்நகராட்சியின் மூலம் அம்மா உணவகம் இயக்குவதற்கு 2021–2022ம் ஆண்டிற்கு உத்தேசமாக கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பொருளின் விபரம் | உத்தேச செலவுத் தொகை (1 மாத்திற்கு) | ஓராண்டிற்கு உத்தேச செலவுத் தொகை (12 மாதங்களுக்கு) |
|---|---|---|---|
| 1. | அரிசி | 1000 | 12000 |
| 2. | மளிகைப் பொருட்கள் பருப்பு, எண்ணெய், உப்பு. | 100000 | 1200000 |
| 3. | காய்கறிகள் | 65000 | 780000 |
| 4. | எரிபொருள் செலவினம் | 60000 | 720000 |
| 5. | தயிர் | 5000 | 60000 |
| 6. | பணியாளர்கள் ஊதியம் (10 நபர்கள் x ரூ.250 x 30 நாட்கள்) | 80000 | 960000 |
| 7. | மின் கட்டணம் | 5000 | 60000 |
| 8. | பதிவேடுகள் மற்றும் ரசீது புத்தகம். | | 100000 |
| 9. | இதர செலவினம். | | 108000 |
| | | | 4000000 |

மேற்கண்ட விபரப்படி, அம்மா உணவகத்திற்கு தேவையான உணவுப் பொருட்கள் உத்தேசமாக ஓராண்டிற்கு ஆகும் செலவினம் ரூ.40.00 இலட்சம் பொது நிதியின் மூலம்மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2921/2015/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1000, நாள். 22.02.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.